DEPOSITION OF WITNESS
IN THE COURT OF DISTRICT MUNSIF, NANGUNERI

| | | |
|---|---|---|
| **Original Suit No** | : | **O.S. 20/2021** |
| **Deposition of witness for** | : | **Plaintiff** |
| **Serial No. of Witness** | : | **PW2** |
| **Name** | : | சுஜாதா |
| **Father's Name** | : | காளிமுத்து |
| **Village** | : | பாளையங்கோட்டை |
| **Taluk** | : | பாளையங்கோட்டை |
| **Age** | : | 49 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873
of day of 09.01.2026

சாட்சி சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

முதல் விசாரணை.

நான் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் தற்போது நாங்குநேரி மண்டல துணை வட்டாட்சியராக பணிபுரிந்து வருகிறேன். நான் அழைப்பாணையில் சொல்லியுள்ள ஆவணங்களை கொண்டு வந்துள்ளேன். அழைப்பாணையில் சொல்லியுள்ள சர்வே எண் 26 என்பது நல்லபெத்தான்குளம் ஆகும். அதன் வரைபடம் , அ பதிவேடு, அடங்கல் **சா.சா.ஆ 1 ,2,3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

அதுபோன்று சர்வே எண் 396/3 என்பது கண்டிகைபேரிகுளம் ஆகும். அதன் வரைபடம், அ பதிவேடு, அடங்கல் **சா.சா.ஆ 4,5,6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. சர்வே எண் 100 என்பது கால்வாய் ஆகும். அதன் வரைபடம், அ பதிவேடு, அடங்கல் **சா.சா.ஆ 7,8,9** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

சர்வே எண் 100 க்கு மேற்பக்கம் சர்வே எண் 108 அமைந்துள்ளது. சர்வே எண் 100 க்கு தென்பக்கம் சர்வே 26 குளம் அமைந்துள்ளது. சர்வே எண் 108 க்கான வரைபடம், அ பதிவேடு, அடங்கல் **சா.சா.ஆ 10,11,12** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

எங்களது ஆவணங்களில் சர்வே எண் 108 தனியாருக்கு பாத்தியப்பட்ட இடமாக துலங்கும். சர்வே எண் 112 க்கான வரைபடம், அ பதிவேடு, அடங்கல் **சா.சா.ஆ 13,14,15** ஆக குறியீடு செய்யப்படுகிறது. சர்வே எண் 112 ஓடை ஆகும்.

குறுக்குவிசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.